விலை சதம் 5

முதற் பதிப்பு — பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE C. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு — சுதந்திரத்திற்காக வெளிவரும் — நாமார்க்கும் குடியல்லோம்

Telegrams: "SUTANTIRAN" COLOMBO — Phone: 3411

புத்தகம் 1 | கொழும்பு, சாவகச்சேரி மாசி 15 | Colombo December 28 1947 | விரோதி 1867 மார்கழி 13 | இதழ் 206

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. பஞ்சாத்தெரு, கொழும்பு.

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

பண்டித ஜவஹர்லால் நேருமீது இலங்கையின் மிகுந்த பிரேமை

பரஸ்பரம் உதவ, இரு பிரதம மந்திரிகளின் சமரசப் பேச்சு வெற்றியடைவதாக !

உணவுக்காக ஒரு வருடத்துக்கு 12 கோடி ரூபாய் கைபபொறுப்பு

பிச்சைக்காரர்போன்றுநாங்கள்தத்தளிக்கிறோம்

சென்னையில் நிதி மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பத்திரிகா நிருபருக்கு அளித்தபேட்டி விபரம்

சென்னை, டிச. 26

இன்று காலை விமான மூலம் இலங்கைப்பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா சென்னை வந்து சேர்ந்து பின் பிற்பகலில் இவர் பம்பாய் பறப்பட்டார். புது டில்லியில் 28-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பண்டித நேருஜியுடன் நடத்தப்படப் போகும் இலங்கை-இந்தியர் பிரச்னை பேச்சுவார்த்தை காரணமாகவே இலங்கைப் பிரதமர் புதுடில்லிக்குச் செல்கின்றார் நாளை இவர் போபாலில் தங்குவார் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் இந்தோ - இலங்கை நல்லெண்ண பேச்சு வார்த்தையில் இந்தியாவையும் இலங்கையையும் பிணைக்கும் முக்கிய பிரச்னைகள் பற்றியும் இலங்கையிலுள்ள இந்திய மக்கள் பிரஜா உரிமை பற்றியும் பேசப் படும்

முதலில் பிரஜா உரிமை அதன்மேல் பாதுகாப்பு

புதுடில்லி செல்லும் இலங்கைப் பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா பேசுகையில் இந்தோ-இலங்கைப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படுமென்று நாம் நம்புவதாகவும் இலங்கையிலுள்ள இந்திய மக்களின் பிரஜா உரிமைதான் முக்கியமான பிரச்னையென்றும் இன்று இரு நாடுகளும் காமன்வெல்த் நாடுகளின் கீழ் இருக்கும் டொமினியன்களாக இருப்பதால் இப்பிரச்னையை இரு நாடுகளுமே தம்முள் தீர்ககமுடியுமென்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் இந்த பிரஜா உரிமைப் பிரச்னைக்குப் பின்னர்தான் பாதுகாப்புப் பிரச்னைபற்றி விவாதிக்கப்படுமென்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் இரு நாடுகளிடையேயும் பரஸ்பர நன்மை கருதி செய்துகொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்

பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்பற்றி அவர் கூறுகையில் பாதுகாப்பு விஷயத்தில் தாங்கள் பிழைபாடு நடந்துகொள்ளவில்லை யென்றும் இந்தியாவைவிட்டு ஒப்பந்தம் செய்ய முடியாதென்று பிரிட்டனுடன் பரஸ்பர நன்மை கருதிய ஒப்பந்தம் ஏற்பட்டதென்றும் தெரிவித்தார்

திரு சேனநாயகா இன்றிரவு பம்பாயில் தங்கி நாளைக் காலை மீண்டும் புறப்பட்டு போபால் வழியாக புதுடில்லி செல்வாரென்றும் போபாலில் சாஞ்சியில் புத்தரின் பிரதம சீடர்களின் அஸ்தியை வைப்பதற்காகக் கட்டப்படும் பௌத்த விஹாரை அஸ்திவாரக் கல் நாட்டு விழாவில் இவர் கலந்து கொள்வாரென்றும் கூறப்படுகிறது. இவர் 30-ம் தேதி கராச்சிக்கு விஜயம் செய்து பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலைச் சந்திப்பாரென்றும் தெரிகிறது

சென்னை விமான நிலையத்தில் அங்குள்ள இலங்கை மக்களால் பிரதமர் வரவேற்கப்பட்டார்.

செட்டிநாடு மகாராஜா பிரமருக்கும் அவரது சகாக்களுக்கும் விருந்தளித்தார். பிரதமரின் அந்தரங்கக் காரியதரிசி திருபர்களுடன் பேசுகையில் திரு சேனநாயகா அவரது கிராமிய தொடர்புகளை விட்டுவிடவில்லையென்று தெரிவித்தார்.

சாஞ்சி செல்லும் இலங்கை நிதி மந்திரி

இலங்கை நிதி மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று சாஞ்சிக்கு இன்று காலை புறப்பட்டுள்ளார். சாஞ்சியில் நாளை (27) பௌத்த விஹாரை ஒன்றுக்கு அஸ்திவாரக் கல் நாட்டப்படும். போபால் மகாராஜா அஸ்திவாரக் கல்லை நாட்டுவார். இந்த வைபவத்தில் கலந்துகொள்ளவே இலங்கை நிதி மந்திரியும் வந்துள்ளார்.

பௌத்த விஹாரை அஸ்திவாரக் கல் நாட்டு விழாவின் போது பௌத்த மத பிக்குகள் இருவரின் அஸ்திகள் அங்கு பிரதிஷ்டை செய்யப்படும்.

புத்தருடைய இரு சீடர்களாகிய சாரிபுத்தா, மொகலானா ஆகிய போரின் ஞாபகச் சின்னங்களை சுமார் 60 வருஷங்களுக்கு முன் சாஞ்சியிலிருந்து தூக்கிச் சென்று லண்டன் ஆல்பர்ட் மியூஸியத்தில் ஸர் ஆர்தர் கன்னிங்ஹாம் வைத்திருந்தார். அந்த ஞாபகச் சின்னங்கள் மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பத் தரப்பட்டுள்ளது, புதிதாகக் கட்டப்படும் விஹாராவில் அந்த புனிதமான ஞாபகச் சின்னங்கள் நிர்மாணம் செய்யப்படும். விஹாரா கட்டப்பட்டதும் இலங்கை புத்த காலனி ஒன்று இங்கு அமைக்கப்படும். புத்த மத ஆராய்ச்சிக் கழகம் ஒன்றும் அமைக்கப்படும். இந்த பௌத்த விஹாரைக்கு இலங்கை மகா பாதிசங்கம் நிதி சேகரித்துள்ளது.

நிதிமந்திரியை பேட்டிகண்ட விடத்து அவர் இலங்கைக்கு கிடைக்கும சுதந்திரமபற்றி பேசுகையில் கூறியதாவது:-

அடுத்த வருட முற்பகுதியில் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்படும். பிரிட்டிஷ் காமன் வெல்த் நாடுகளில் இலங்கை ஒரு டொமினியன் நாடாக இருக்கும் அந்திய நாட்சிக்குள் அநேக வருடங்களாக அடிமைப்படுத்தப் பட்டிருந்த இரு நாடுகளும் இப்பொழுது விடுதலை பெறுவதால் இனி மேல் சிநேக மனப்பான்மையில் ஒன்றுகூடி இரு நாடுகளதும் பல பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஒன்றுகொன்று உதவியளிக்க முடியும்.

அடுத்த வருடம் பிப்ரவரியில் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாட்டத்துக்கு பல பிரபல ஸதர்களையும் இலங்கை அழைத்துள்ளது. இலங்கை மக்களின் ஆழ்ந்த அனுதாபத்திற்குரியான பண்டித நேருஜியும் இதில் கலந்து கொள்வாரென்று நம்புகிறேன்.

இலங்கையின் பிரச்னைகள் இந்திய பிரச்னைகளைப் போன்றவைகளென்றே எண்ணினேன். இதுவரை இலங்கை மந்திரிசபை இருமாதங்களாகி

பிரிட்டிஷ் கைத்தொழில் பொருள்கள் காட்சி

மே மாதத்தில் நடத்த ஏற்பாடுகள்

லண்டன், டிச 26

லண்டனிலும் பர்மிங்ஹாமிலும் 1948 மே மாதம் 3-ம் தேதிமுதல் 14-ம் தேதிவரை நடைபெறப் போகும் பிரிட்டிஷ் கைத்தொழில் பொருட்கள் காட்சியின்போது 8000 தரிற்கு அதிகமான ஸ்தாபனங்கள் கலந்துகொள்ளும். இந்த இரு இடங்களிலும் காட்சிசாலையில் இடவசதி கோரிய ஸ்தாபனங்களுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவது அநேகமாக முடிந்துள்ளதென்றும் இருக்கும் இடவசதியிலும் பார்க்க அதிகமாகவே கோரிக்கைகள் இருந்தனவென்றும் பிரிட்டிஷ் கைத்தொழில் ஸ்தாபனங்களின் சங்க அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஏற்றுமதி திட்டத்தில் இந்த இரு இடங்களிலும் நடைபெறும் காட்சிகளை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இங்கு 87 பிரிட்டிஷ் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படுவதால் வெளிநாடுகளிலிருந்து இந்த காட்சிகளைப் பார்க்க வருபவர்கள் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிடுவது இலகுவாக இருக்குமென்று கூறப்படுகிறது.

இந்த இரு காட்சி இடங்களிலும் எல்லாவிதமான வசதிகளும் அளிக்கப்படுமென்றும் இலவசமாகப் பலவித சேவைகளும் செய்யப்படுமென்றும் இரு இடங்களுக்கு மிடையே விசேஷ பிரயாண ஒழுங்குகள் செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ராய்ட்டர்)

மணிலாவில் பெரும் சூறுவளி

ஏராளமான சேதங்கள் ஏற்பட்டுள்ளனவாம்

மணிலா, டிச. 26

இன்று அதிகாலையில் இங்கு ஏற்பட்ட சூறுவளியால் தெருக்களெல்லாம் வெள்ளத்தால் மூழ்கிவிட்டன. வீதிகளெங்கும் சேதமடைந்த பொருள்களே காணப்பட்டன. 1934 ஆண்டின் பின் மிக மோசமான சூறுவளி இப்பொழுது தாக்கி ஏற்பட்டுள்ளது. மத்திய ஜிலா நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள மின்சார விநியோகமும் தடைபட்டுவிட்டது. புயலினால் பண்டகசாலைகளின் மேற்கூரைகள் தூக்கியெறியப்பட்டுவிட்டதால் பண்டக சாலைகளில் உள்ள பொருள்கள் சேதமடைந்துள்ளன. மணிலா குடாவில் நின்ற கப்பல்களுக்கும் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்ததும் தென்கிழக்கில் உள்ளதுமான சாமர் தீவில் ஆள்சேதமும் பொருள் சேதமும் ஏராளமாக இருக்குமென்று பயப்படப்படுகிறது. 1944-ம் ஆண்டில் நேச நாடுகளின் தளமாக இத்தீவு இருந்தது. [ராய்ட்டர்]

ஸ்ரீமதி அமிருத கௌரி சென்னை வருகிறார்

சென்னை, டிச 26

அகில இந்திய மாதர் மகாநாட்டில் கலந்துகொள்ள ஸ்ரீமதி அமிருத கௌரி (சுகாதார மந்திரி) சென்னைக்கு இன்று மத்தியானம் விமானத்தில் வருகிறார். டிசம்பர் 31-ம் தேதி வரை தங்குவார். மகாநாட்டில் கலந்துகொண்ட பின் ஓய்வு நேரங்களில் நகர ஆஸ்பத்திரிகளை பார்வையிடுவார்.

அ. இ. மா. மகாநாட்டுத் தலைவி வருகை

அ. இ. மாதர் மகாநாட்டு தலைவி ஸ்ரீமதி அனுசூயா தேவி லாகபுரியிலிருந்து விமானத்தில் பிரயாணம் செய்து நேற்றுமாலை சென்னை வந்து சேர்ந்தார். ஸ்ரீமதி கமலாதேவியும் அதே விமானத்தில் வந்தார்

கராச்சி, டிச 2

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ஜின்னாவின் 71 வது பிறந்தநாளைக் கொண்டாடப்பட்டது. பாகிஸ்தான் முழுவதிலும் அதிகார பூர்வமாகக் கொண்டாடப்பட்டது. (ராய்ட்டர்)

சுரங்கத்தில் மோதிய கப்பல் கடலில் மூழ்கியது

ஹோக், டிச, 26

டச்சு கடற்கரை யோரத்தில் அப்பால் நேற்று "ஹோக்ஹக்" என்னும் ஒரு நார்வே கப்பலில் பிரயாணம் செய்த 25 பேர்களில் 24 பேர்கள் நீரில் மூழ்கி இறந்து விட்டனர் என்று கூறப்படுகிறது. இக்கப்பல் ஒரு கடற்சுரங்கத்தில் மோதுண்டு கடலில மூழ்கியதாக நம்பப்படுகிறது. ஒருவர் உல்விபத்தினின்றும் தப்பிக்கரை சேர்ந்துள்ளார். சுரங்க வெடிவிபத்துபற்றி அவர் அதிகாரிகளிடம் கூறினார் [ராய்ட்டர்]

கப்பல் வெடிவிபத்தில் ஒருவர் மரணம்

போட்செட் துறைமுகத்தில் நடைபெற்றது

போட்ஜெட், டிச 26

போட்செட் துறைமுகத்தில் நேற்றிரவு "அலிஸ்" என்னும் கப்பலில் ஏற்பட்ட வெடிவிபத்து சமபந்தமாக எகிப்திய போலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்று கூறப்படுகிறது. கப்பலில் பலத்த சேதமேற்பட்டுள்ள துடன் ஒரு காவலாளி கொலையுண்டதாகவும் தெரிகிறது. (ராய்ட்டர்)

நேஷனல் லொசிஞ்சர். பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற

லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்
பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது
நேஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளுமே.

மொத்தமாகவும், சில்லறையாகவும்
குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

நேஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பேலிய கொட, கழனியா.
டெலிபோன்: கழனியா 85.

இப்பொழுதே வாங்குங்கள். பிந்தினால் கிடைப்பதரிது

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு இரட்டிப்பங்கு பெறுமதியுள்ளது

உங்கள் டெங்கினால் — மங்கள சூரியன்

மெய்கண்டான்
REGD. 7479
திருக்குறட் கலண்டர்

தேதி ஒற்றைகளில் மெய்கண்டான் பிறெஸ் படங்களில் மங்களகரமான சூரியன் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.

இனும்: அஃறேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த இன்னா வுலகம் புலர்

என்னும் திருக்குறளுள்ள எங்கள் கலண்டருக்கு No. 1 டயறி இலை-குறித்த குறளுள்ள தேதி ஒற்றையில் எங்கள் அச்சியந்திரசாலையின் அடையாளமும் உள்ளது அத்தேதி ஒற்றையை கிழித்து அனுப்பினால் டயறி அனுப்பலாம்.

மெய்கண்டான் தமிழ் டயறி
No 1 & No 2

மிகவும் பிரயோசனமுள்ளன. கையடக்கமான அளவும் அழகும் உறுதியும் உள்ளன.

எல்லாப் பிரபல வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி

ஜீ. ஜீ. யின் தேக அசௌகரியம்

கொழும்பு, டிச. 27

திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேக அசௌகரியம் காரணமாக ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாரசீகத்திலுள்ள ரஷிய ஸ்தானிகர்

இந்தியாவுக்குத் திடீரெனப் புறப்பட்டுச் சென்ற மர்மம்

டெஹ்ரான், டிச. 26

பாரசீகத்திலுள்ள சோவியத் ஸ்தானிகர் திரு. ஐவலபத்ஷிகோவ் விசட விமானத்தில் இன்று இந்தியா புறப்படுகிறாரென்று ஊர்ஜிதம் செய்யப்படாத அறிக்கை கூறுகின்றது.

இந்த ஸ்தானிகர் போகும் இடத்தின் பெயரோ அல்லது இவர் புறப்படுச் செல்லும் விஷயமோ ஒன்றும் கிடைக்கவில்லை. இவரது திடீர் புறப்பாடு மர்மமாக இருக்கிறதென்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 8411.
விலை சிறந்த இ மார்கழி மீ 13 உ
ஞாயிற்றுக்கிழமை

விரைவில் தெரிந்துவிடும்!

இந்தியநாடு தாய்ப்பசு இலங்கை அதன் பச்சிளங் கன்று. இராமர் படையெடுப்பு, சோழர் யுத்தங்கள் நடந்த போதிலும் தாயும் கன்றும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்திருக்க வேண்டுமென்பதே இரு நாடுகளின் அபிவிருத்தியை விரும்புபவர்களின் அவாவாகும்.

கி. மு. 543-ம் ஆண்டு தொடக்கம் இந்தியர்கள் இலங்கையில் குடியேறத் தொடங்கினார்கள். ஆயின் பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் ஏற்பட்ட பின்னர்தான் இந்தியர்கள் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டார்கள். 1837-ம் ஆண்டில் 10,000 இந்தியர்கள் வெள்ளையர்களுடைய கோப்பித் தோட்டங்களில் வேலைசெய்தவந்தள்ளனரென்று கூறப்பட்டிருக்கிறது. இன்று ஏழு லட்சம் இந்தியர்கள் இலங்கைத்தோட்டங்களில் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள்தான் இந்நாட்டின் பொருளாதார ஜீவநாடி ஆவர். காடாய், மலையாய் [சருகு கானகமாய் இருந்த இடங்களைப் பொன் கொழிக்கச் செய்தவர்கள் இவர்களே!

இந்த ஏழு லட்சம் பேர்களில் நூற்றுக்கு எண்பது விகிதத்தினர் இலங்கையில்தான் பிறந்தவர்கள். மற்ற இருபது விகிதத்தினர் இந்நாட்டில் எட்டு வருடங்களுக்கு மேல் வசித்தவர்களாவர். அப்படியிருந்தும் இவர்களில் எல்லோருக்கும் இலங்கையில் பிரதா உரிமை உண்டு என்று கூற முடியாது. இதற்குக் காரணம் இந்நாட்டு அரசியலில் இந்தியர்களுடன் சம்பந்தப்பட்டு விடுவார்கள் என்று சிங்கள வகுப்பு வாதிகள் கொண்ட அச்சமே. இந்தப் பயப் பீதியால் சென்ற காலங்களில் எத்தனையோ சட்டங்களை இந்தியர்களுக்கு மாறாக இலங்கை அரசாங்கம் விதித்தது. தனச்சமுளவு பெறும் இந்தியர்களை நாடுகடத்தவும் செய்தார்கள். பகிரங்கமாக அரசாங்க சபையில் 'கடைசி இந்தியன் இலங்கை கரையை விட்டு அகன்றால் தான் நிம்மதியாக இறப்பேன்" என்றும் இந்தியர் மீதுள்ள துவேஷத்தை ஒரு பிரகலபதி கூறினார். ஆனால் இந்தியன் பொதுஜனமயுள்ளவன். இத்தனை அவமானத்தையும் பொறுத்து வந்தான்.

1941-ம் ஆண்டு பெப்ரவரி, செப்டம்பர் மாதங்களில் டெல்லியிலும், கொழும்பிலும் இந்தப் பிரஜாஉரிமை சம்பந்தமாக இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆயின் யுத்தம் குறுக்கிட்டதால் ஒரு முடிவையும் பெறமுடியவில்லை.

இப்பொழுது அரசன் தொடர்பாகவே பேச்சுவார்த்தைகள் இன்று இலங்கையின் பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்காவுக்கும், இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்குமிடையே நடைபெற வருக்கின்றது. இலங்கையைத் தாயகமாகக் கொண்ட சகல இந்தியருக்கும் பிரஜா உரிமை இருக்க வேண்டும் என்பதல் இங்குள்ளவர்களுக்காவது, பண்டித நேருவுக்காவது அபிப்பிராய வேற்றுமை கிடையாது. இதை பண்டித நேரு இலங்கைக்கு வந்திருந்தபொழுது இந்தியர்களுக்கு அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். "இந்தியர்களே, நீங்கள் மதிப்புள்ள அந்நியர்களாக இருந்து தொழிலைச் செய்து பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு வெளியேறிவிடலாம். அவ்வாறாயின் உங்களுக்கு இலங்கையில் எவ்வித உரிமையும் கிடையாது ஆனால் நீங்கள் இலங்கையர்களாக மாறிக் கொண்டால், இலங்கையருக்கு அளிக்கப்படும் உரிமைகள் உங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்" என்பதுதான் நேருவின் மணிமொழிகள்.

ஆகவே இன்று இரு பிரதமர்களும் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னை, எவன் இலங்கையன்; எவன் குடியேறிய இந்தியன் என்பதன் நியதியே. இக்கேள்விகளுக்குத் தீர்க்கமான முடிவு கண்டுவிட்டால் இலங்கை இந்தியர்நெருக்கடி தீர்ந்து விடும்.

இந்தியா இன்று சுதந்திர நாடாகவுள்ளதுகூறது இலங்கை அதைப் பகைத்துக் கொள்ள முடியாது. திரு சேனநாயக்கா இன்னும் தொடர்ந்து பிரிட்டிஷாருக்கு கைத்தாளம் போட்டபோகிறாரா? அல்லது தாயை அணைத்துக் கொள்ளுவாரா என்பது விரைவில் தெரிந்து விடும்.

விவசாயப் பணிவேலை நிறுத்தம்

நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை

800 தொழிலாளிகள் போராட்டம் தொடர்கிறது

அநுராதபுரம், டிச. 26

மகாபராக்கிரம சமுத்திர மாலிராணுவத்தினர் விவசாய பணியில் நடந்து வருமபொதுவேலை நிறுத்த நிலையில் இதுவரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மொத்தம் 800 தொழிலாளர்கள் இங்கு வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

வேலை நிறுத்தத்தின் காரணமாக தீவிரகலகம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுவதன் காரணமாக, தூரகோணங்களில் இருந்து இங்கு ஆயுதபாணிகளான போலிசார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்விடத்தைக் காவலுபுரிந்து வருகின்றனர்.

வேலைநிறுத்தத் தொழிலாளர்கள் புதுமை யமை யன்று ஒரு பகிரங்கக்கூட்டம் நடத்தினர். வேலைநீக்கம் செய்யப்பட்ட 3 தொழிலாளிகளையும் உடனே வேலைகொடுக்க வேண்டுமென்று அவர்களால் கோரப்பட்டது.

இத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தமே வேலைநிறுத்தத்தின் உடனடிக்காரணமென்று தெரிகிறது.

உதவி நிலக்கமிஷனர் எஸ். பி. டி. சிவா நிலைமையைப் பரிசீலனை செய்யும் நோக்கமாக இங்கு விசாரணைகள் நடத்தி வருகிறார் என அறியப்படுகிறது.

துப்பாக்கியால் இன்ஸபெக்டரைச் சுட்டு விடுவதாக மிரட்டல்

கைதுசெய்யச் சென்ற போது நடைபெற்ற சம்பவம்

கண்டி, டிச 27

டொன் ஜேம்ஸ் ஹெக்டர் பெர்ணண்டோ என்பவனை கைதுசெய்ய சப்-இன்ஸபெக்டர் ரிச்சாட்ஸ் சென்றபோது அவன் அதனை எதிர்த்ததோடு அவரைச் சுட்டுவிடுவேன் என்று சொல்லி மிரட்டியதாகவும் அவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது சப்-இன்ஸபெக்டரின் சாட்சியம் பிவருமாறு:-

பெர்ணண்டோவும், வேறு சிலரும் அப்பிட்டியாவிலிருந்து கொழும்புக்குச் செல்லும் ஒரு முதலாளியை வழிமறித்து அவரிடம் இருந்த பொருளைக் கவர்வாடத் திட்டமிட்டிருந்ததாக எனக்குத் தகவல் எட்டியது. அதன்பேரில் எதிரியைக் கைது செய்வதற்காக நானும் ஒரு போலீஸ் கோஷ்டியுமாக அவனுடைய பதுக்கிடத்திற்குச் சென்றோம். எதிரி போலீஸ் கோஷ்டியினரின் முன் எதிர்ப்பட்டதும் தனது எட்டரைச் சுழல் துப்பாக்கியால் எங்களைச் சுட்டு விடுவதாகப் பயமுறுத்தினான். ஆனால் நாங்கள் ஒருவிதமாக அவனை மடக்கி கைதுசெய்துவிட்டோம்.

பெர்ணண்டோ மீது விளக்கமறியற்சாலையில் கஞ்சா வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது எதிரி 1000 ரூபாய் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

பெவான் என்பவரின் கொலை சம்பந்தமாகவும் எதிரி மீது ஒரு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

இராச்சிய பரிபாலனம் செய்ய விரும்புவதை மன்னரை என்றார்கள் ஆன்றோர். அப்போது தேசத்தைப் பிடித்தால் இராச்சிய பரிபாலனம் ஆகிவிடும். வெள்ளை காரன் வந்த பிறபாடு இராச்சிய பரிபாலனை செய்வதற்கு 'வோட்டு'ப் பிடித்தாக வேணும். 'வோட்டு'ப் பிடிப்பதற்குச் செல்வாக்கு வேண்டும். செல்வாக்குக் கிடைப்பதற்கு முன்னை பயிர் 'அடி' வேண்டும் பெயர் அடிபடுவதற்கு ஏதாவது பெரிய காரியம் செய்தாக வேண்டும். அப்படிச் செய்வதற்கு தக்க ஆற்றல் வேண்டும். அல்லது லாதவர் என்ன செய்வது? ஏதாவது சலசலப்பான காரியம் செய்து பார்க்கலாம்! என்ன மாதிரியான காரியம் சலசலப்பை கொடுக்கும்?

ஆம். பெரியவர் ஒருவரை அதிகம் செல்வாக்குள்ளவர் ஒருவரை தூஷித்துப் பார்க்கலாம். பொறுப்புள்ளவர் ஒருவர் நியல் அபாண்டமான பழியைச் சுமத்திப் பார்க்கலாம். பொதுத்தாகையான ஒருகூட்டத்தினரை தூற்றிப்பார்க்கலாம். இப்படி ஏதாவது செய்தால் யாரடா இந்தவாலவெள்ளியென்று எல்லோரும் திரும்பிப் பார்ப்பார்கள் அப்போது பேரிடும். ஒருமாகாண அதிபரைப் பட்சபாதம் காட்டினார் என்று பிரசங்க மேடையில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தால் பத்திரிகைகளில் கொட்டையெழுத்துக்களில் தலையங்கம் போடுவார்கள். முதல்நாள் அந்தியும் மற்றைநாள் காலையிலும் பத்திரிகை படிப்பவர்கள் ஒரு கணம் கூர்ந்து பார்ப்பார்கள். மறுதும் ஒருநாள் இருநாள் இதைப்பற்றிப் பேசுவார்கள். அப்பறம் மறந்து விடுவார்கள். ஆனால் தமிழ்க் கிளார்க்கு ஒருவருக்கு ஒரு பொடுபோட்டுப் பார்க்கலாம். தமிழ் கிளார்க்கு தான் சிங்களவர்கட்கும் தமிழ் கட்கும் இடையே இருந்த அந்நியோன்னியத்தைக் கொடுத்தது என்று ஒரு குறிப்பை முட்டையைத் தொப்பென்று பரமார்த்த குருவின் பிரதம சிஷ்யன் செய்வதாறு செய்து பார்க்கலாம். அப்போது யாரடா இந்தக் கோடாரிக்காம்பு என்று மறறையோர் பார்ப்பார்கள். அதற்கிடையில் குதிரை முட்டையில் இருந்து குதிரைக்குட்டி வெளிக்கிளம்பும். அதன் மேல் ஏறிச் சவாரி செய்து எட்டுத்திக்கும் வெற்றி பெறலாம். இவ்வாறு மகாவியூகம் வகுக்கும் மகாதாவிகள் நம் நாட்டில் இருக்கிறார்கள்.

இந்தக் கணக்குப் பரிசோதனை அல்லது எடுக்க முடியவில்லை. கரும அவருடைய சிப்பந்தகளு போலும் ஒரு சமயம் வாய்மாய் பொய்மல பொய்தலாய குள்ளே வைத்த கொட்டை இருக்கும் கணக்குக்கு வெளியே போய் விக்கிக்கொண்டாம் அம்பலப்படுத்தி அவற்றிருக்கலாம். அப்படியாயின் றைப்பறறி விஞ்வெழுப்பிவிடுதால பாவம்! மனுஷனுக்கு வாகள் இவ்வாறு இந்தப் இந்த முந்நூற்றப்பத்து வருபெரியார் மூன்று வருடங்கட்கு களும் எவ்வாறு செலவுபுகுமு முன்னர் செலவழித்த செலவு ஒரு வேளை புகுந்தாலும் எவ்கணக்கைப்பற்றி கேட்ட முந்நூற்றுப் பத்து வினாக்களுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லையாம். ஆனால் அந்தப் பெரியார் ஒன்றுமேல் ஒன்றாக ஏணிப்படி வழியே ஏறி மேலே போய்க்கொண்டிருக்கிறார். இந்தக் கேள்விகளையும், கணக்குப் பரிசோதகருடைய சவால்களையும், பாராளுமன்றத்தில் கிண்டுதலையும், பத்திரிகைகள் போடும் கூச்சலையும், நகைப்புச் சித்திரக்காரர் (cartoonists) தீட்டிவிடும் சித்திரங்களையும் சொற்பழமும் சட்டைசெய்யாது பேசாமடந்தையாயிருக்கிறார் இதைத்தான் பித்தலாட்டம் என்பது.

இவ்வாறு பெரியார் பேசாது இருப்பதற்கு நியாயம் என்னவென்று யூகித்துப்பார்ப்போம்.

ஜப்பான் குண்டு போடும் காலங்களிலே குண்டுகள் சமீபத்தில் வெடித்தால் செவிக்குள்ளேயிருக்கும் சதை வெடித்து செவிடாய்ப் போடுமென்று கூறினார்கள். அது வாசகநேர்கடகு ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன். அவ்வாறு நடைபெறாமல் தடுப்பதற்கு காதுக்குள்ளே பஞ்சும் வரம்புக்குள்ளே ஒரு 'கொட்டணு' வைத்துக்கொண்டிருக்கச் சொன்னார்கள். அவ்வாறுதானே எங்கள் சீ. டீ. சீ. யும் செய்திருப்பார். ஒருவேளை காதிற்குள்ளே வைத்த பஞ்சை இன்னு எடுக்கவில்லைபோலும். இருக்கிறார்கள்.

இந்தக் கணக்குப் பரிசோதகர் கேட்ட வினாக்களுக்கு மாய் பொய்மல பொய்தலாய குள்ளே வைத்த கொட்டை லாம் அம்பலப்படுத்தி அவற்றிருக்கலாம். அப்படியாயின் தால பாவம்! மனுஷனுக்கு வாகள் இவ்வாறு செலவுபுகுமு ஒரு வேளை புகுந்தாலும் எவ்வாறு மறுமொழி கூறமுடியுமாம் ஆனால் அந்தப் பெரியார் ஒன்றுமேல் ஒன்றாக ஏணிப்படி வழியே ஏறி மேலே போய்க்கொண்டிருக்கிறார். இந்தக் கேள்விகளையும், கணக்குப் பரிசோதகருடைய சவால்களையும், பாராளுமன்றத்தில் கிண்டுதலையும், பத்திரிகைகள் போடும் கூச்சலையும், நகைப்புச் சித்திரக்காரர் (cartoonists) தீட்டிவிடும் சித்திரங்களையும் சொற்பழமும் சட்டைசெய்யாது பேசாமடந்தையாயிருக்கிறார் இதைத்தான் பித்தலாட்டம் என்பது.

இவ்வாறு பெரியார் பேசாது இருப்பதற்கு நியாயம் என்னவென்று யூகித்துப்பார்ப்போம்.

ஜப்பான் குண்டு போடும் காலங்களிலே குண்டுகள் சமீபத்தில் வெடித்தால் செவிக்குள்ளேயிருக்கும் சதை வெடித்து செவிடாய்ப் போடுமென்று கூறினார்கள். அது வாசகநேர்கடகு ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன். அவ்வாறு நடைபெறாமல் தடுப்பதற்கு காதுக்குள்ளே பஞ்சும் வரம்புக்குள்ளே ஒரு 'கொட்டணு' வைத்துக்கொண்டிருக்கச் சொன்னார்கள். அவ்வாறுதானே எங்கள் சீ. டீ. சீ. யும் செய்திருப்பார். ஒருவேளை காதிற்குள்ளே வைத்த பஞ்சை இன்னு எடுக்கவில்லைபோலும். இருக்கிறார்கள்.

செம்டையும் ஒருவகை ஈயத்தையும் கலந்தால ஒரு கலப்புலோகம் தோற்றப்படும். அக்கலப்பு லோகத்தைப் பித்தளையென்பர். அது பொன்னைப் போல மினுங்கிக்காட்டி ஜனங்களை மிரட்டப் பார்க்கும். இந்தக் காரணம பற்றி அச்சொல்லிலிருந்து பெறப்பட்ட சினிமாகுபெயர் ஒன்று ஆங்கிலத்தாஷையில் உண்டு. அது "பித்தளைத்தனம்" எனப்படும். அச்சொல்லின் கருத்தைத் தமிழில் விளக்கிக் காட்டுவது மகாகஷ்டம். ஒருவேளை "வெட்கக்கேட்ட முட்டாள் தனம்" என்று சொல்லிப் பார்க்கலாம். ஆயினும் ஆங்கிலப் பாஷையிலுள்ள குறிப்பத்த ஆகு பெயரின் கருத்தைச் சரியாக இதுகாட்டவில்லை. மேலும் இந்தத்தமிழ் வார்த்தைக்கு வெளவமான சொல்லாகவுமில்லை ஆகையால் ஆங்கிலத்தில் உள்ள ஆகுபெயரை நேரடியாக மொழிபெயர்த்துத் தமிழில் பாவிக்கலாம். அதன் கருத்தைச் சரியாக விளக்குவதற்கு ஒரு கதை சொல்லுகிறேன். அது உப கதையல்; உண்மையான கதைதான்.

இலங்கை யென்ற தீவிலே ஒலிவர் குணத்திலக்கர் என்ற ஒரு புதிர் இருந்தார். (இப்பவும் இருக்கிறார்) ஜப்பான் யுத்தம் தொடங்க இவருக்கும் வெள்ளி தினச தொடங்கிற்று. ஒலிவின் தலைப்பிலே இருந்த வெள்ளியென்று சத்தம்.

ஜப்பான்காரன் வந்தால் குழிதோண்டி மறைந்திருக்க ஒழுங்கு செய்யுமாறு கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தப் பெரியார் பொறுப்பில் வட்டார்கள். இவருக்கு விருப்பம் விருப்பமானவர்களை உதவி சீ. டீ. சீ. களாகவும் சிப்பந்திகளாகவும் நியமிக்கவும் உரித்தாகக்கொடுத்தார்கள். ஆனால் இலங்கை அரசாங்கத்தில ஒரு கூடாத பழக்கம் என்னவென்றால் செலவழிக்கக் கொடுத்த பணத்திற்கு கணக்குக் காட்டும்படி கேட்கிறது. அத்துடன் விடுவதில்லை; சமர்ப்பித்த கணக்குச் சரியாயிருக்கிறதா என்று பார்க்கும்படி ஒரு கணக்குப் பரிசோதகரை நியமித்தும் விடுவார்கள்.

இந்தக் கணக்குப் பரிசோதகர் கேட்ட வினாக்களுக்கு மாய் பொய்மல பொய்தலாய குள்ளே வைத்த கொட்டை லாம் அம்பலப்படுத்தி அவற்றிருக்கலாம். அப்படியாயின் றைப்பறறி விஞ்வெழுப்பிவிடுதால பாவம்! மனுஷனுக்கு வாகள் இவ்வாறு செலவுபுகுமு ஒரு வேளை புகுந்தாலும் எவ்வாறு மறுமொழி கூறமுடியுமாம் ஆனால் அந்தப் பெரியார் ஒன்றுமேல் ஒன்றாக ஏணிப்படி வழியே ஏறி மேலே போய்க்கொண்டிருக்கிறார். இந்தக் கேள்விகளையும், கணக்குப் பரிசோதகருடைய சவால்களையும், பாராளுமன்றத்தில் கிண்டுதலையும், பத்திரிகைகள் போடும் கூச்சலையும், நகைப்புச் சித்திரக்காரர் (cartoonists) தீட்டிவிடும் சித்திரங்களையும் சொற்பழமும் சட்டைசெய்யாது பேசாமடந்தையாயிருக்கிறார் இதைத்தான் பித்தலாட்டம் என்பது.

இவ்வாறு பெரியார் பேசாது இருப்பதற்கு நியாயம் என்னவென்று யூகித்துப்பார்ப்போம்.

ஜப்பான் குண்டு போடும் காலங்களிலே குண்டுகள் சமீபத்தில் வெடித்தால் செவிக்குள்ளேயிருக்கும் சதை வெடித்து செவிடாய்ப் போடுமென்று கூறினார்கள். அது வாசகநேர்கடகு ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன். அவ்வாறு நடைபெறாமல் தடுப்பதற்கு காதுக்குள்ளே பஞ்சும் வரம்புக்குள்ளே ஒரு 'கொட்டணு' வைத்துக்கொண்டிருக்கச் சொன்னார்கள். அவ்வாறுதானே எங்கள் சீ. டீ. சீ. யும் செய்திருப்பார். ஒருவேளை காதிற்குள்ளே வைத்த பஞ்சை இன்னு எடுக்கவில்லைபோலும். இருக்கிறார்கள்.

மாஸ்கோவில் இரு பெண்களுக்கு தலா 10 வருடச் சிறை

சிகரெட்டில் பணம் சம்பாதிக்க முயற்சி

மாஸ்கோ, டிச 26

சோவியத் அரசாங்கம் 14-ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் பழைய ரூபிள் நாணயங்கள் பத்துக்கு புதிய ரூபிள் நாணயம் ஒன்றுதான் என்றும் தெரிவித்திருந்தது. இதன்படி பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் ஒரு ஸ்டோர் மானேஜரான ட்ரிபோநோலா என்னும் பெண்ணும் அவருடைய சிநேகிதி லோகிநோவா என்னும் பெண்ணு 6400 ரூபிள்கள் (பழைய நாணயம்) மதிப்புள்ள 1582 பாக்கெட்டுகள் சிகரெட்டுகளை வாங்கி [பதுக்கி வைத்திருந்தனர். இவற்றை புது நாணயம் புழுக்குவந்ததும் மாற்றுபணம் சம்பாதிக்கலாமென்பதே அவர்கள் நோக்கமாகும். இது விஷயம் அதிகாரிகளுக்குத் தெரிய வந்ததினால் இருவர் மீதும் மாஸ்கோ கோர்ட்டில் விசாரணை நடந்தது. இருவருக்கும் தலா 10 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

[ராய்ட்டர்]

பிரபல அமெரிக்க விமான ஓட்டி

தூர கிழக்கைச் சுற்றிப் பார்க்கிறார்

ஷாங்கை, டிச 26

பிரபல அமெரிக்க விமான ஓட்டியான திரு கார்ள்ஸ விஸ்டபெர்க் என்பவர் இன்று ஷாங்கைக்கு விமானத்தில் வந்து சேர்ந்தார். இவர் தூரகிழக்கு சுற்றுப் பிரயாணம் செய்வதற்கே வந்தவராகும்.

குலாம், மணிலா, ஹொங்ஹாங் ஆகிய இடங்களுக்கு இவர் ஏற்கனவே விஜயம் செய்துள்ளார். டோக்கியோவுக்கு புதன் முமை புறப்படுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

[ராய்ட்டர்]

நீஜாமில் இந்திய ஏஜண்ட் ஜெனரல்

ஸ்ரீ முன்ஷி நியமனம்

சம்பளம் இன்றி வேலை பார்ப்பார்

புதுடில்லி, டிச 26

ஹைதராபாதிலில் இந்திய ஏஜண்ட் ஜெனரலாக ஸ்ரீ கே. எம். முன்ஷி நியமிக்கப்படுவதாக இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

அவர் ஜனவரி முதல் வாரத்தில் பதவி ஏற்பாரா என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பதவியை வகிப்பதற்கு சம்பளம் எதுவும் வாங்கிக்கொள்ள முடியாதென ஸ்ரீ முன்ஷி தெளிவாக அறிவித்துவிட்டார்.

மாஜி சென்னை மந்திரி திருமணம்

சென்னை, டிச 26

மயிலாப்பூர் சந்தோமில் இன்று காலை 9 மணிக்கு மாஜி மந்திரி ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி ஸ்ரீ, ஸ்ரீமதி கமலா வுக்கும் (ஸ்ரீமதி கமலின்) விவாகம் நடைபெற்றது. ஸ்ரீ எச். டி. ராஜா விவாகத்தைக் கூட இருந்து நடத்தி வைத்தார். ஸ்ரீ பாலகள் காசா சுப்பராவ் என். கோபால அய்யர் மற்றும் பலர் வந்திருந்தனர்.

பர்மா சுதந்திர விழா

பிரிட்டன் சார்பாக விமான மந்திரி விஜயம்

லண்டன், டிச. 26

ரங்கூனில் நடைபெறும் பர்மா சுதந்திரதினக்கொண்டாட்டத்திற்கு பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாக பிரிட்டிஷ் விமான மந்திரி திரு ஆர்தர் ஹென்டர்சன் விஜயம் செய்வார். டிசம்பர் 30-ம் தேதி அவர் லண்டனிலிருந்து புறப்பட்டு ஜனவரி 3-ம் தேதி ரங்கூன் வந்துசேருவார்.

(ராய்ட்டர்)

மஞ்சூரியாவில் நிலைமை மோசம்

தகவல்கள் வெளியேறாமல் தடுக்க சீன அரசாங்கத்தின் ஏற்பாடு

மூக்டான் நகருக்கு ஆபத்து

சீனம், அமெரிக்க-ரஷிய யுத்த களமாகுமா?

ஷாங்கை, டிச. 26

மஞ்சூரியா முழுவதிலும் சீன அரசாங்கத்தின் துருப்புகளின் நிலைமை படுமோசமாகி விட்டது. அதனால் மஞ்சூரியாவிலிருந்து எவ்விதமான செய்திகளும் வெளியேறாது சீன அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது என்று மூக்டானிலுள்ள அரசாங்கத் தலைமைக் காரியாலயத்திலிருந்து இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது கம்யூனிஸ்டுகளாரிகாலப் போராட்டம் ஆரம்பித்த சமயம் சீன அரசாங்கம் பிறப்பித்த 12 அம்சராணுவச் சட்டம் முழுமையாக அமுல செய்யப்படும். இச்சட்டத்தை மீறுகிறவர்கள் உடனே சுடுக் கொலைப்படுவார்கள். கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்து வருவதால் மூக்டான் ஆபத்தான நிலைமையிலிருக்கிறது.

சீனத்தின் எதிர்காலம்

நாங்கிங், டிச. 26

சீனக் குடியரசின் உப தலைவர் டாக்டர் சன்போ, நேற்று சீன கூமின்டாங் கட்சி, சமூக ஜனநாயகக் கட்சி, வாலிபர் சங்கக் கட்சி ஆகிய கட்சிகளின் பிரமுகர்களான அங்கத்தினர்களை கொண்ட கூட்டத்தில் பேசினார். சீனக் குடியரசின் புதிய அரசியல் திட்டம் அமுல் செய்யப்படுவதையொட்டி நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

சீனக்கிற்கு ஆள் பலமும் மூலபலமும் இருப்பதால் உலக அரசியல் சதுரங்கத்தை எடுப்பதும் திருப்பக்கூடிய பிடி சீனத்தின் கையில் இருக்கிறது.

புதிய அரசியல் திட்டத்தின் படி நமது பலம் அதிகரிக்கும். தேசியம், ஜனநாயகம், ஜனங்களின் ஜீவ ஞாயம் ஆகிய முக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் சன்யாட் சென் நிறுவிய குடியரசு முதலாவிதவக் கொள்கைகளும் பொது உடமைக் கொள்கைக்கும் மிடையே நடுநிலைமையை திட்டமாகும்.

அமெரிக்க ஸ்தானிகர் கிறிஸ்மஸ் செய்தி

லங்கை, டிச. 26

சீனக்கிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஸடுவார்ட் சீனர்களுக்கு கீழ் கண்ட கிறிஸ்மஸ் செய்தி விடுத்தார்:-

சீனத்தில் நிலைமை கஷ்டமாகி வருகிறபோதிலும் அதனை அதைரியப்படவேண்டியதில்லை கூமின்டாங் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே அவநம்பிக்கை இருந்து வருவதால் தான் இவ்வித சங்கட மேற்பட்டிருக்கிறது. இரு கட்சிகளுக்குமிடையே நம்பிக்கை ஏற்படின் சமாதானம் உண்டாகிவிடும். புதிய அரசியல் திட்டம் சீனப் புனருத்தாரணத்திற்கு அடிகோலும்.

சீனத்திற்கு ஆயுத ஏற்றுமதி ரத்து

வாஷிங்டன், டிச. 26

பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து சீன அரசாங்கத்துருப்புகளுக்காக ஏற்றுமதி செய்யப்படவிருந்த கானடா ஆயுதங்களின் ஏற்றுமதி ரத்து செய்யப்பட்டது. கானடா மக்கள்கிளர்ச்சி செய்ததால் இவ்வாறு செய்யப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்ட கானடா-சைனா அரசாங்க ஒப்பந்தத்தின்படி ஏற்றுமதி செய்ய விருந்த ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் கப்பலுக்கு முன்பு கானடா தொழிலாளர்கள் மறியல செய்தனர்.

ஐடில்வெஸ் சம்பவம்

நியூயார்க், டிச. 26

யுத்தகாலத்தில் சைனா, பர்மா, இந்தியா தளங்களுக்கு அமெரிக்க தளபதியாக இருந்த ஜெனரல் ஸடில்வெல்லுடன் சீனக் குடியரசுத் தலைவர் சியாங்கை ஷேக் ஒத்துழைக்க மறுத்ததால் ஜூலை மாதம் ஜெனரல் ஸடில்வெல்லை திருப்பி அழைத்து கொள்ளும்படியாயிற்று. இவ்விஷயம் அமெரிக்க மாதர் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.

பொய்தந்தி அடித்து பணம் பெற்றவரா?

இருவர் மீது நம்பிக்கை மோசடி வழக்கு

கொழும்பு, டிச. 27

காலையில் ஆகாய விமானமூலம் சென்னை போய், அங்கிருந்து 25,000 ரூபாய்க்குச் செக் வாங்கி உடனே ஒருவருக்குக் கொடுக்கும்படியாக ஒரு வியாபாரிக்கு அவர் சகோதரரின் கையொப்பமிட்டுத் தந்தி அடித்து, மோசடியை வெற்றிகரமாக நிறைவேற்றியதாக வி. சிரில் பெரேரா என்பவர்மீதும் இச்செக்கைப் பெற்றுக்கொண்டதாக பி. எம். டி. சேரம் என்பவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் ஜயசிங்க பிரதர்ஸ் எனும் வர்த்தக ஸ்தாபனத்தினை பங்காளி சி. பி. எல். ஜயசிங்க அளித்த சாட்சியம் பிவருமாறு:-

எனது இதர பங்காளிகள் இருவரும் எனது சகோதரர்கள். மானேஜிங் டைரக்டர் எரிக் ஜயசிங்கா ஆவர். முதலாவது எதிரி சேரம் எங்கள் ஸ்தாபனக் கணக்குகளைப் பார்த்து வருவது வழக்கம். இரண்டாவது எதிரி சிரில் பேரேரா ஒரு தரகராவர். முதலாவது எதிரி எமது வியாபாரத்துக்கு ஒத்தாசை செய்தவர்தான். இரு எதிரிகளும் ஒரே வீட்டிலேயே வசிப்பது வழக்கம்.

நான் கொல்மீர், குமாரதுங்கே ஆகியோர்டம் பணம் கடனாகப் பெற்றிருந்தேன். அவர்கள் டிசம்பர் 12-ம் தேதி பணத்துக்காக நெருக்க ஆரம்பித்தனர். அப்போது எரிக் ஜயசிங்க சென்னையில் இருந்தார். டிசம்பர் 15ல முதலாவது எதிரி எரிக் ஜயசிங்காவுக்கு ஓர் கடிதம் எழுதினார் அதில் இக்கடனைத் தீர்ப்பதற்கு 25,000 ரூபாயைத் தன்னிடம் கொடுக்கும்படி எனக்கு கடிதம் எழுதும்படியாக அவர் எரிக்கைக் கேட்டிருந்தார் டிசம்பர் 16-ம் தேதி 25,000 ரூபாய்க்கு ஒரு செக் முதலாம் எதிரிக்குக் கொடுக்கும்படி எனக்கு ஓர் தந்தி வந்தது நான் அதன்படி 17-ம் தேதி ஓர் செக் வழங்கினேன். அதைப் பதினமே எதிரி செக்காக மாற்றிக்கொண்டார். ஆனால் கடன் தீர்க்கப்படவில்லை.

எரிக்கின் கை ஒப்பத்தோடு வந்த தந்தி அவரால அனுப்பப்படவில்லை என்று இப்போது எனக்குத் தெரியவந்துள்ளது. இரண்டாவது எதிரியான சிரில் பேரேராவே டிசம்பர் 16-ம் தேதி காலை விமான மார்க்கமாக சென்னை போய் அங்கிருந்து பிரஸ்தாப தந்தியை அனுப்பியுள்ளார். அன்று மாலையே அவர் கொழும்பு திரும்பிவிட்டார்.

மாஜிஸ்டிரேட்டால் இரண்டு எதிரிகள் மீதும் வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

காசி, டிச. 26

காசி ஹிந்து சர்வகலாசாலை மாணவிகள் நான்கு பேர் கடந்த 8 தினங்களாக உண்ணாவிரதமிருந்து ஞாபகமிருக்கும்; டாகடர் அமரநாதஜி சர்வகலாசாலை உப அதிபர் பதவி ஏற்க சம்மதித்துவிட்டார் என்று தகவல் கிடைத்ததன் பேரில் அம்மாணவிகள் உண்ணாவிரதத்தை நிறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையா சுதந்திரக் கோரிக்கை

புதிய சமஷ்டி அரசியலுக்கு பலத்த எதிர்ப்பு

— பெப்ரவரி முதல் தேதி பொது வேலை நிறுத்தம் நடைபெறும்

சிங்கப்பூர், டிச 26

மலேயா சுதந்தரப் போராட்டம் நடத்த கூட்டுநடவடிக்கை எடுக்கத்தொளை நிறுவப்பட்டுள்ள அகில மலேயா ஐக்கிய சபையின் தலைவர் 1948-வது வருடம் பெப்ரவரி மாதம் நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் செய்யும்படி கட்டளை பிறப்பித்திருக்கிறார். அதே தலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வகுத்துள்ள மலேயாவின் புதிய சமஷ்டி அரசியல் அமுலுக்கு வருவதால அதிருப்தியை ஆட்சேபிக்கவே இப்பொது வேலை நிறுத்தம் நடைபெறும். புதிய அரசியல் திட்டத்தில சீனர்கள் அதிக வெறுப்புற்றிருக்கிறார்கள். மலேயா சமஷ்டியிலிருந்து சிங்கப்பூர் தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பது ஆட்சேபிக்கப்படுகிறது. புதிய அரசியல் திட்டப்படி கவர்னர் ஜெனரலுக்குப் பதிலாக ஏற்படுத்தப்படும் ஹை மிஷனருக்கு விசேஷ அதிகாரங்கள் இருக்கலாகாதென்றும் மலேயாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டுமென்றும் அகில மலேயா ஐக்கிய சபை கோருகிறது.

தேவை

பிரசித்திபெற்ற இந்திய மருந்துச் சாலைக்கு கொழும்பு நகருக்கு மட்டும் ஒரு சோல் ஏஜெண்டு தேவை. ரூ 2000/- ரொக்க டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

C/o சுதந்திரன்,
194A தட்டாரத்தெரு கொழும்பு

பிரான்ஸ வரவு செலவுத் திட்டம்

அமெரிக்க கடன் உதவி

பிரஞ்சு பாராளுமன்றத்தில் விவாதம்

பாரிஸ், டிச 27

பிரான்ஸின் 1948வது வருட வரவுசெலவுத் திட்டம் இன்று பிரஞ்சு பாராளுமன்றத்தில் ஒவ்வொரு பிரிவாக வவாதிக்கப்பட்டது ஜனவரி முதல் தேதிக்கு முன் பெரும் பகுதிகள் விவாதிக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கம்யூனிஸ்டுகள் பலமாக தாக்கப்பேசினார்கள். நள்ளிரவுவரை விவாதம் நடைபெற்றது செலவிலபெரும் பகுதி வட்சஷ வரிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டும் அமெரிக்க கடனுதவிகொண்டும் செலவு செய்யப்படும் (ராய்ட்டர்)

மார்க்கெட் நிலவரம்

தங்கம் வெள்ளி விலை

கொழும்பு, டிச 27

தங்கப்பவுண் விற்கும் விலை

	ரூ.	சி.
	70-	00
அரைப் பவுண் "	40-	00
வெள்ளி [நூறு ரூபாய் கொண்ட எடை] "	135-	00

ரப்பர்

கிரேப் நம் 1	ராத்தல்	00-81½
சீட் நம் 1	"	00-55

தேயிலை

நம். 1 தரம்	ராத்தல்	1-85
" 2 "	"	1-64
" 3 "	"	1-55

கொக்கோ

நம். 1 தரம்	ராத்தல்	00-95
" 2 "	"	00-85
" 3 "	"	00-70

தேங்காய்ப் புண்ணாக்கு

புண்ணாக்குடன் ஒன்று	92-50

நமது ஜோதிட பகுதி:

1948-ம் ஆண்டின் பலன்

['சுகனயா' எழுதுவது]

1948-ம் ஆண்டு சர்வசித்து வருஷம் மார்கழி மாதம் 16-ம் தேதி புதன்கிழமை இரவு 12 மணி வரையில் கன்னி லக்கினத்திலும் மகம் நக்ஷத்திரத்திலும் ஜெனனமாகின்றது.

லக்னாதிபன் தொழில் ஸ்தானாதிபன் புதன் சூரியனுடன் சேர்ந்து சுகஸ்தானத்திலும் குடும்பஸ்தானத்தில் கேதுவும் சுகம், அடைநாடு ஸ்தானாதிபன் வியாழன் வீரிய ஸ்தானத்திலும் அலைமதத்தில் ராகுவும் லாபஸ்தானத்தில் சனியும் வீரிய ஸ்தானத்தில் சந்திரன் செவ்வாயுமிருக்கும்போது புத்தாண்டு ஜெனனமாகின்றது

1948-ம் ஆண்டில் உலகமெங்கும் பொதுவுடைமைக் கட்சியார்களால கிளர்ச்சிகளுண்டாகும், ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையில பிரிவினைகள் அதிகரிக்கும். யுத்தமபோன்ற தொல்லைகளும்-தோன்றி மறையும். அமெரிக்காவிலும் இடதுசாரிக கட்சியார்களின் பிரசாரங்கள் அதிகரிக்கும். ஐரோப்பாவில் இடை யிடையே தொழிலாளர் குழப்பங்களும் தொழிலாளர்களுக்கும் முதலாளிவர்க்கத்திற்கும் அதிக பிரிவினைகளும் பெரியோர்களுக்கு ஜீவ ஆபத்துகளும் உண்டாம்.

1948 ம ஆண்டில் மத்திய கிழக்கு நாடுகளின் தொல்லைகள் குறையும். யூதரின் விதி தீர்க்கப்படும். எகிப்திலிருந்தும் அந்நியரின ஆதிக்கம் நீங்கும் இடை யிடையே மத்திய கிழக்கு நாடுகளிலும் இடதுசாரிக கட்சியார்களின பிரசாரங்களால் கிளர்ச்சிகள தோன்றி மறையும்.

1948-ம் ஆண்டில் கிழக்கு நாடுகள எலலாம் விடுதலை யடையும். கிழக்கு நாடுகளிலும் இடை யிடையே இடதுசாரிக் கட்சியார்களால் தொழிலாளர் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் உண்டாம ஆந்தியாவின் தொல்லைகள் நீங்கும். இந்தியாவில் பஞ்சப் பிணியுண்டாம்.

சீனா, ஜப்பான் 1948-ம் ஆண்டில பல தொல்லைகளுக்காட்படும் சீனாவில் யுத்தங்களும் அனமதிக் குறைவுகளும் வெள்ளதனால் அழிவுகளுமுண்டாம் ஜப்பானில் அந்நியரின் ஆதிக்கம் நீடிக்கும்.

1948-ம் ஆண்டில் இலங்கையில அரசியல் முன்னேற்றங்களும், வியாபார விருத்திகளுமுண்டாம். இந்த ஆண்டில் தமிழர்கள் முன்னிலை யடைவார்கள். இன்று தமிழரால் மதிக்கப்படும் இலக்கை வாழ் தமிழருக்கு விடுதலையுண்டாகும் 1948 ம ஆண்டில் ஆசிரியர்களுக்கு மிடையில் இரதியில் ஒற்றுமைகளுண்டாம

இந்தவார தினப்பலன்

ஞாயிறு-டிசம்பர் 28 இன்று பொதுக் கருமங்கள ஆரம்பிப்பதற்கும் கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம், மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள்: டிசம்பர் 29 இன்று மரவகை, செடிவகை நடுவதற்கும் புதுக்கணக்குப் பதிதலுக்கும் வியாபாரம் செய்வதற்கும் பிரயாணங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் விசேஷ தினம்.

சந்திரலக்னம் இடபம், கடகம், கன்னி, தலாம், மகரம் கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில் முன்னேற்றமுண்டாம்.

செவ்வாய்: டிசம்பர், 30 இன்று கொள்ளல் விற்றலுக்கும் பொதுக் கருமங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம், இடபம், கடகம், கன்னி, தலாம், மகரம் கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில் பணம் பறுண்டாம்.

புதன்: டிசம்பர், 31. இன்று வியாபாரம் செய்வதற்கும் பிரயாணங்களுக்கும் கொள்ளல் விற்றலுக்கும் விசேஷ தினம்.

சந்திரலக்னம் மிதுனம், சிங்கம், தலாம் விருச்சிகம், கும்பம் மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில் வெற்றியுண்டாம்.

வியாழன்: தினவரி, 1. இன்று வியாபாரம் புதுக்கணக்குப் பதிதலுக்கும் மரவகை, செடிவகை நடுவதற்கும் பொதுநாள் சந்திரலக்னம், மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில சேர்தலுண்டாம்.

சனி: தினவரி 3 அஷ்டமி, இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்குத். தோஷதினம். சந்திரலக்னம், மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இந்தினத்தில சுகமுண்டாம்.

டச்சு-இந்தோனேஷிய யுத்த நிறுத்த சமரஸம்

ஐ. நா. சபை சமரசக் கமிட்டியின் புதிய திட்டம்

பட்டேவியா, டிச 26

இந்தோனேஷியாவில் யுத்த நிறுத்த சமரஸப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஐ. நா. சபையின் சமரஸக் கமிட்டி டச்சு-இந்தோனேஷிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளிடம் இந்தப் பிரச்னையை விரைவில் தீர்ப்பதற்காக ஒரு புதிய திட்டத்தைக் கொடுத்திருப்பதாக அறியப்படுகிறது (ரஸ்ட்டர்)

ஜனாப ஜினா பிறந்த தினம்

வாஷிங்டன், டிச. 26

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் மிஸ்னாவின் 72-வது பிறந்த தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் அமெரிக்க ஜனங்களின சார்பாக ஜனாப் ஜினாவுக்கு வாழ்த்துச் செய்தியனுப்பியுள்ளார்.

வானத்தில் நீலச்சந்திரன்!

லண்டன், டிச 26

சில நாட்களுக்கு முன்னர் இங்கு வால் நட்சத்திரம் தெரிந்த அடியோடே நீலச் சந்திரன் தோன்ற ஆரம்பித்ததான் என்று சி அயர் வான சாஸ்திரிகள் எடுத்திய கடிதம் 'டைம்ஸ்' பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. சந்திரன் 20 நிமிஷம் நீல நிறமாக இருந்ததாம்.

கிரேக்க போட்டி அரசாங்கம்

வாஷிங்டன், டிச. 27

அமெரிக்காவிலுள்ள கிரேக்க ஸ்தானிகர் டென்ட்ராமிஸ் பின் வருமாறு தெரிவித்தார்:- கிரேக்க போட்டி அரசாங்கத்தை பல்கேரியாவும் யுகோஸ்லேவியாவும் அங்கீகரிப்பது அமைதிக்குப் பங்கமுண்டாக்கும் செயலாகும்.

உங்கள் வாழ்க்கையின் தேர்வைகள்

SUN BRAND BEEDIES — சூரியன் மார்க் பீடி

ஊக்கம்,
உற்சாகம்,
சந்தோஷம்
இவைகளை ஒருங்கே
கொடுக்கக் கூடியது

'சூரியன், கடியாரம் & அசோகா திறம் பீடிகளே'

ஹோல்சேல்:
M. V. நாதன் அன், சன்ஸ்
முக்கூடல்,
திருநெல்வேலி ஜில்லா.
S. INDIA.

பிராஞ்சு:
91, மேட்டுத்தெரு.
கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

சுய அறிவுப் போட்டி நிர். 22

பரிசு ரூ. 2750-00

1-ம் பரிசு	ரூ. 1500-00	2-ம் பரிசு	ரூ. 500-00
3-ம் "	ரூ. 250-00	விசேஷ,,	ரூ. 250-00
1-ம் போனஸ்	ரூ. 100-00	2-ம் போனஸ	ரூ. 50-00

முடிவு தேதி 12-1-48

கைத் தையல் மெஷின், பாக்கர் "51" பவுண்டன் பேனா விசேஷ பரிசுகள் — 1-ம் 2-ம் பரிசு பெறும் எல்லோருக்கும் ஒவ்வொரு பவுண்டன் பேனா இனாம்!

மேலதமான கூப்பனகள் தேவையானோர் எமக்கு எழுதிப் பெற்றுக்கொளளலாம். காகிதத்தில் தயாரிததும் விடையனுப்பலாம். போட்டி ஆசிரியரின் விடை கொழும்பு இந்தியன் வங்கியில் டிப்பாஸிட் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50 ரூ. ஒரு கூப்பனுக்கு பதினாறு கூப்பன்கள் அனுப்பலாம். 16 கூப்பன்களுக்கு மேற்படும் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 25. இதன் விடையும் பரிசு பெற்றோர் விபரமும் 19 1-48ல் எமால் வெளியிடப்படும் ஜோதி மாத சஞ்சிகை (தனிப்பிரதி சதம் 20) யில் வெளிவரும் பிரவேசக் கட்டணமாக ஒரு பவுண்டு மணியோடர் போஸ்டல் ஒர்டர்களில் ஸிலோன் குரோஸ்வட் பஸல் கொம்பனி, கொழும்பு என்று எழுதி வேண்டும். விடைகள் தேர்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்படல வேண்டும்.

இடமிருந்து வலம்:

1. பொலிவுற்று விருத்தியுற்று இருக்கும் இதனை வருத்தி செய்தல் எமால முடிந்த காரியமன்று.
2. நால் வகைப் படைகளுளொன்று.
4. நல்ல இதில் விளைந்தபயிர் நல்ல பலனைக்கொடுக்கும்.
5. அன்பு.
6. 'வாம்' கொடுக்கப்பட்டிருக்கிறது.
7. நம் தாய்மார் பெற்றெடுப்பர் இதை.
13. எந்த ஒரு கருமத்தைச் செய்யவும் அதில இத இருக்கவேண்டுமே!
14. நன்மைக்கு எதிர் இது.
15. ஐசுவரியம்.
16. இவர்களைக் கனம் பண்ணல வேண்டும்.

1 தமிழ்				2 ப	3 தூ				4 த					
ய	பரிசு		5 ப	ரி					க					
வு	ரூபா				த			6 வ	ர	ம்				
2750-00					ல்									
7 ம		வு		8		9				10 ம்				
	போட்டி		11	ரு		ண்	12 ர்			ன				
ச	நிர்		ந்	மை		ணீ	ப							
ம்	22		தி		13 ஆ	ர்			ம்					
முடிவு தேதி 12-1-48								14 தி	ன்					
15 செ	ல்			ம்		16 பெ	ரி			ர்	SJ			

மேலிருந்து கீழ்:

1. எல்லாம் வல்லவனின் இது இருக்கும் வரை ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை.
2. போட்டியில் வெற்றிபெற்றால் ஒரு இது கிடைப்பது நிச்சயம்.
3. 'தாவுதல்' தான்
4. இதுவும் ஒரு உலோகம் தான்.
7. நீரில் வாழுமிது.
8. உலகத்தில் இது அடைய விரும்பாதவர் ஒருவரும் இலலையெனலாம்.
9. சொட்டுச் சொட்டாயும் வடிந்தகொண்டிருக்குமிது.
10. என்னவந்தாலும் இதைக் கோணாத வைத்துக் கொளள வேண்டும்.
11. வயிறு.
12. பாவம்! வயோதிபர் தடுமறிகொண்டிருக்கிறார்.

1 தமிழ்				2 ப	3 தூ				4 த					
ய	பரிசு		5 ப	ரி					க					
வு	ரூபா				த			6 வ	ர	ம்				
2750-00					ல்									
7 ம		வு		8		9				10 ம்				
	போட்டி		11	ரு		ண்	12 ர்			ன				
ச	நிர்		ந்	மை		ணீ	ப							
ம்	22		தி		13 ஆ	ர்			ம்					
முடிவு தேதி 12-1-48								14 தி	ன்					
15 செ	ல்			ம்		16 பெ	ரி			ர்	SJ			

பெயர் _____

விலாசம் _____

_____

மணியோடர்/போஸ்டல் ஒர்டர் நிர்.....

தேதி————1948 போட்டி நிர். 22

சுய அறிவுப் போட்டிக் காரியாலயம்,
த. பெட்டி 761, 69 மலிபான் வீதி,
கொழும்பு.

PHONE 3032 T'GRAM: 'SNUYARIVU' COLOMBO.

சந்திரா பீடி
CHANDRA BEEDI
M.R. SIVARAM & CO.,
604, B. NEW TOWN MADAMPE.

அறிவிப்பு

எங்கள் மருந்துகள், மாதிரைகள், சங்கு மார்க் பற்பொடி, எனாமல் தைலங்களுக்கும் அடியிற் கண்ட நண்பர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்:-

(1) கொழும்பு: V. I. குதலேன், 563, தொப்பிகொடை ரோடு, மருதானை.
(2) நீர்கொழும்பு: இந்தியா A. H. டிரேடென்சரி, 43 பெயின் வீதி.
(3) திருக்கோணமலை: A. S. M. ஜெகனாதன் & கோ, நாதா கோஸ்ட் ரோடு.
(4) மன்னார்: A. மதார் லெவ்வை, கிரான் பஜார்
(5) யாழ்ப்பாணம்: (மாகாணம்) S. சுப்பிரமணியம் நேடிவ் மெடிக்கல் டோர்ஸ், K. K. S ரோடு கிரான்பஜார்

ஏஜண்டுகள் கேட்லாக் விலையில் 100-க்கு 50 விதம் விலை கூட்டி விற்பார்கள்.

தேவை: கண்டி, ஹட்டன், பதுளை, காலி, மட்டக்களப்பு, ரக்கினபுரி, அனுராதபுரம், புத்தளம் முதலான இடங்களில் ஏஜண்டுகள் தேவை. டிபாசிட் கட்டக்கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

தண்டபாணி வைத்தியசாலை,
தபால் பெட்டி நெ 1, பெரியகடை வீதி, பமனி (S. I.)

பிடிச் சக்கரவர்த்தி.
த.பி.
செரக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்
சொக்கலால் ராம்சேட்
த.பி.சொக்கலால் & ராம்சேட் பீடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழ் ராஜ்யம்

தமிழ் காங்கிரஸின் தனிப்பெருப் இலட்சியம்

இதை வகுப்புவாதமென்று கூறுவோர் வகையறியா மூடர்கள்

ரப்பர், தேயிலை, கொப்பரவை நம்பி பிழைப்புக்கு அமெரிக்காவையும் பிரிட்டனையும் தேர்பார்க்கும் சிங்களப் பிரதேசம் ஏமாறப்போகிறது!

வயிற்றுக்கு சோறுபோடும் நெற்பயிர் கொழிக்கும் பிரதேசங்கள் தமிழரின் வட மாகாணமும் கீழ் மாகாணமுமே!

["சஞ்சயன்"]

"இத்தீவிலுள்ள நமது சிறிய சமூகத்தின் வருங்காலம் எப்படி அமையப்போகிறது. சமூகத்தின் தலைவர்களாயுள்ளவர்களைப் போன்றவர்கள் எவ்வாறு வழிகாட்டப் போகிறார்கள்" என்று என் முன்னே மிகுந்த உற்சாகத்துடனிருந்த சென்னட்டர் டாக்டர் நாகநாதனைக் கேட்டேன். "சிறிய சமூகம் என்று சொல்லவேண்டாம் நாம் பெரிய சமூகத்தவர்" என்று தேள் கொட்டியதைத்தவர் போல அவர் கூறினார். "இத்தீவில் நாம் இரண்டுலட்சமிருக்கலாம் அதைதான் குறிப்பிட்டேன்" என்றேன். கடலுக்கப்பாலுள்ள இரண்டு கோடி தமிழரைக் கருதாதில் வைத்துக்கொண்டுதான் அவர் தமது அரசியல் கொள்கைகளை விளக்கப் புகுந்தார்.

இலங்கையிலுள்ள தமிழ் பிரதேசங்களைப் புறம்பாகப் பிரித்துத் தனிபாட்சி வழங்குவது வெறுங் கனவல்ல; காரிய சாத்தியமான அரசியல் திட்டம். இதை ஒருவரும் சரிவர விளங்கிக்கொள்ளவில்லை" என்றார், "அதனால் இலங்கைவாழ் தமிழருக்குத்தான் நஷ்டம். ஏனெனில் நாட்டின் பொருளுற்பத்திக்கான செழிப்பான பிரதேசங்கள் பெரும்பாலும் சிங்களப் பிரதேசத்திற்றான் அமைந்திருக்கின்றன. தமிழ் பிரதேசங்களின் நிலவளங்கூட சிங்களப் பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டுதான் நடைபெறுகிறது. டாக்டர் ஜெயனிங் கூட இந்தக் கருத்தைதான் தெரிவிக்கிறார்" என்றேன்.

ஆட்சிப் பொறுப்பை மகிய அரசாங்கத்தின் கையிலிருந்து பிரித்து கிராமங்கள் வரையில் விட்டுவிடுவதுதான் ஜனநாயக தத்துவத்தின் சாரம். அந்த வகையில் பாஷாவாரியான தொகுதிகட்கு அவரவர் விரும்பியபடி தன்னாட்சி கொடுத்துவிடவேண்டும் இதுதான் உண்மையான ஜனநாயகம். அந்த வகையில் தமிழ்ப் பாவையைப் பேசுவோர் தன்னாட்சி விரும்பினால் அதில் பிழையென்றுமில்லை. இந்திய யூனியனிலுங்கூட இம்மாதிரி பாஷாவாரியான பிரிவு ஏற்பட்டுக்கொண்டேவருகிறது. தமிழர் ஒரு மாகாணமாகப் பிரிய விரும்பினார்கள். ஆந்திரரும் அப்படியே மலையாளிகளும் தனியாகிவிட்டார்கள். இந்த பிரிவு ஆட்சி இயல்பானது. இலங்கையிலும் இது இயல்பான ஒரு விருப்பமாகும். இதை வகுப்புவாதமென்று கூறுவது தகாது. தவ்வொரு இனத்தவரும் தத்தம் பாஷை, பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றுக்கு ஏற்ற முறையில் ஆட்சி நடத்தவும் அவற்றை விருத்தி செய்யவும் கோருவதில் இயற்கைக்கு மாறான தருமம் ஒன்றுமில்லை.

தமிழர் காங்கிரஸ மதம் சாதியென்பதை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனமல்ல தமிழ் பேசும் சாகியத்தாரெல்லாரையும்கொண்டது. தமிழ் பேசுவோர் இஸ்லாமியராயிருக்கலாம்; கிறிஸ்தவராயிருக்கலாம்; இந்துக்களாயிருக்கலாம் பாஷாவாரிய கஅவர்கள்ஒன்று தமிழ்க் காங்கிரஸ தமிழ் பாஷை பேசும் எல்லாச் சாதியாரையும் சமயத்தாரையும் கொண்டது. இதை வகுப்புவாதஸ்தாபனமென்று கூறுவதில் அர்த்தமில்லை.

'தனிப்பட்ட தமிழ் ராச்சியத்தை நீங்கள் கோருவதானால் தமிழ் ராச்சியத்தின் பொருளாதார அமைதிபோம்?' என்று கேட்டார்கள் தமிழ் பிரதேசங்களின் பொருளாதார நிலையை இன்றைய உலக நிலையையும் பொருளாதார நிலையையுங்கொண்டு மதிப்பிட முடியாது 10 20 வருடங்களின் பின்னர் உலக அரசியல் நிலையும், பொருளாதார நிலையும் எப்படியிருக்குமென்பதை வைத்துக்கொண்டுதான் ஆராயவேண்டும் அப்படி ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவது இலங்கையின் செல்வத்துக்காதாரமான விவசாயங்களெவை? முதலாவது ரப்பர், தேயிலை, தேங்காய் ஆகிய இவை மூன்றும்தான் இலங்கையின் மிக முக்கியமான உற்பத்திப் பொருட்கள். இவற்றின் தற்போதைய நிலையையும் வருங்கால நிலையையும் சீர்தூக்கிப் பார்த்தால் ரப்பருக்கும் தேங்காய்க்கும் வருங்காலத்தில் பெரிய போட்டி ஏற்படப்போவதில்லை. பெரிய மந்தமடையப் போகின்றன. நமது வியாபாரமெல்லாம் பெரும்பாலும் இப்பொழுது ஆங்கில-அமெரிக்க வட்டாரங்களில்தான் நடைபெறுவருகின்றது. ரப்பருக்கு இப்பொழுதே நல்ல விலை இந்தமார்க்கெட்டிலில்லை. மேலும் அமெரிக்காவிலே செயற்கை ரப்பர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இயற்கை ரப்பருக்கு இனிமேல் மார்க்கெட் குறைவு. இலங்கை ரப்பருக்கு மலாயா ரப்பரும், தென்னாப்பிரிக்க ரப்பரும் போட்டியிடுவதால் நமது ரப்பர் தப்பமாகாது. அடுத்தபடி தேங்காய் தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக சோயாக் கடலையென்கிற ஒரு பொருளை ஏராளமாக உபயோகிக்கப்படி செய்கிறார்கள். அது மலிவானது. எனவே கொப்பராவின் விலை பெருவாரியாக இறங்கிவிடும். தேயிலையின் நிலையும் அவ்வளவு நல்லதாக தெரியவில்லை உயர் பூமியில் விளையும் தேயிலைக்குக் கிராக்கி ஓரளவுக்கு மானமுண்டு. கீழ்பூமித் தேயிலையோடு போட்டிபோட தென்னாப்பிரிக்க தேயிலை வந்துவிடும். எனவே இலங்கையின் முக்கியமான மூன்று பொருள்களும் வருங்காலப் பொருளாதார அமைப்பில் அவ்வளவு நல்ல வருமானத்தைக் கொண்டுவரமாட்டா.

இலங்கையின் செல்வத்துக்கு வருங்காலத்தில் பெரிய ஆதாரமானது நெற் செய்கை. அதற்கு வாய்ப்பான பூமி வடமாகாணமும் வட மத்திய மாகாணமும், கீழ் மாகாணமுமாகும் இலங்கையின் முக்கியமான உணவுப் பொருள் அரிசியானபடியால் ஆங்கில-அமெரிக்கப் பொருளாதார மாற்றங்களினாலோ, அரசியல் பிணைபுகளினாலோ நெல்லின் முக்கியத்துவம் குறையமாட்டாது. எப்படியும் உணவுக்கான அரிசியை உற்பத்தி செய்தோ வெளியூரிலிருந்து பெற்றோதானாக வேண்டும். இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கை முழுவதுக்குமே போதுமான நெல்லைச் செய்கை பண்ணலாம். அதனால் தமிழ் ராச்சியத்தின் பொருளாதாரம் பலம் பெறும். மேலும் உடைக்குத்தேவையான பருத்தி விளைவதற்கு வன்னிப் பிரதேசமே மிகவாய்ப்பான பூமி அத்துடன் அங்கே கருப்பு வளர்க்கத்தக்க சீனி உற்பத்தியும் நடத்தலாம். இலங்கையின் மூன்றிலிரண்டு பங்கு கரைப்பகுதி தமிழர்களிலிருப்பதால் கடல் படு கிரவியங்கள் பெரும்பாலும் அவர்களுக்குண்டு மீன்பிடித் தொழில் விருத்திசெய்தால் கருவாடு முதலிய பொருட்களோடு உரம் செய்வதற்கும் போதிய வசதியுண்டு கரையோரக்களிமேடு செய்வதற்கு நல்ல வசதிகளுண்டு. கீழ்மாகாணத்திலே இலுமனைட் என்ற விலையுயர்ந்த உலோகமிருப்பதாக உலோகாராய்ச்சி நிபுணரான திரு. வார்டியா கூறியிருக்கிறார். வவுனியாப் பகுதியிலே நல்ல மின்னரம் உண்டு கிரிதோணமலை, வல்வெட்டித்துறைபோன்ற நல்ல துறைமுகங்கள் நம் வசமிருப்பதால் இறக்குமதியாவுடன் நடைபெறும் வியாபாரம் நமது துறைகளின் மூலம் நடைபெறலாம். அதனால் ஏராளமான வருமானம் தமிழ்ராச்சியத்துக்குண்டாகும். தமிழருடைய உழைப்பும் விடாமுயற்சியும் அவர்களுக்கு எப்பொழுதும் செல்வத்துக்கு ஆதாரமாக வேயிருக்கும் எனவே தமிழ் பிரதேசங்கள் தனி ராஜ்யமாவதால் பொருளாதார நெருக்கடியுண்டாகுமென்று எண்ணுவது சரியல்ல. ஒரு வகையான பிரதேசங்களிலும் பார்க்க தமிழ்ப் பிரதேசங்களே செல்வத்தில் சிறந்து விளங்குமென்றார். பக்கத்தில் டெலிபோன் கிணுகிணுக்கத்து.

தனியாட்சி வேண்டுமென்றவுடன் தமிழர் சிங்களவரோடு சண்டைக்குப் போகப் போகிறார்கள் சிங்களவரோடு வீண் வாதப்பிரதிவாதப்பேச்சுக்குப் போகிறார்களென்று பேச்சல போடுவது அர்த்தமில்லாத பேச்சு. சயராஜ்யம் என்பது பிறப்புரிமை. உலகத்திலுள்ள எந்தச் சிறு பகுதியினரும் தங்களையும் தன் ஆட்சியை விரும்புவதில் தவறில்லை. இலங்கைத் தமிழருக்கும் சொந்தமானது மகுடம் தாயகம் அந்தத் தாயகத்தில் தன் மதிப்பும் தன்னாட்சியும் உள்ள ஒரு அங்கமாக தமிழர் இருக்க விரும்புகிறார்கள் அவ்வளவுதான். அதுதான் உண்மையான தேசாபிமானம். தன்னினப் பெருமையை எண்ணி அபிமானமும் பெருமையும் அடைவதில் தவறென்ன? தமிழர் தன்மதிப்புள்ள ஒரு பங்குக் கூட்டாளியாய் இலங்கைத் தாய்நாட்டிலிருந்து அதன் முன்னேற்றத்துக்கு முயற்சி செய்ய விரும்புகிறார்கள் இதுதான் தமிழ் காங்கிரஸின் இலட்சியம் இந்த இனத்தன்னாட்சியை மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களிடமிருந்தியாவில் ஏற்படுத்த விரும்புகிறார்கள். இதற்கும் வகுப்புவாதத்திற்கும் வெகுதூரமிருப்பதையறியாமல் தமிழ் காங்கிரஸை வகுப்பு ஸ்தாபனமென்று கூறுகிறவர் விஷயமறியாதவர்கள் என்றார்.

மறுபடியும் டெலிபோன் கிணுகிணுத்தது. பத்து நிமிஷந்தான் சென்னட்டர் நாகநாதன் பேசினார். அதற்குள் தமிழரின் இலட்சியத்தையும் அவர்கள் இலங்கையில் வருங்காலத்தில் எவ்வாறு முன்னேற வேண்டும்; எவ்வாறு ஒற்றுமையையும் சுபீட்சத்தையும் வளர்க்கவேண்டுமென்றெல்லாம் தூரதிஷ்டியுடன் எடுத்து விளக்கினார் உடம்பிலுள்ள நோய்க்கு மாத்திரம் வைத்தியம் செய்யக் கற்றுக்கொண்டவரல்ல, டாக்டர் நாகநாதன் அரசியல் கோளாறுகட்கும் ஏற்ற பரிகாரத்தைச் செய்யக்கூடியவர் மருந்து சரியென்று கோயாளி மறுக்கினாலும் அதை அவர் கொடுத்துவிட்டு போபவர் அல்ல என்பது தெரிந்தது.

வியாபாரி வீட்டில் ரூ. 30,000 கொள்ளை

கராச்சி, டிச. 26

ஆயுதம்தாங்கிய ஆறு கொள்ளைக்காரர்கள் ஹைதராபாத்தில் (ஸிந்து) ஒரு ராஜதானியில் ஒரு பணக்கார வியாபாரி வீட்டிலிருந்து ரூ. 30 ஆயிரம் மதிப்புள்ள சொத்துக்களை கொள்ளையிட்டுப் போயினர்.

மூன்றாவது உலக யுத்தம் மஞ்சூரியாவில் ஆரம்பிக்கலாம்

அமெரிக்காவும்-ரஷியாவும் சீனாவில் மோதுமா?

ஹாங்கை, டிச. 26

மூன்றாவது உலக மகா யுத்தம் மஞ்சூரியாப் பிரதேசத்தில் விதை கொள்ளலாம், இங்கு ஷியாங்கை ஷேக் அரசாங்கத்துக்கு அமெரிக்கா செய்துவரும் ஆயுத பண உதவிகளை எதிர்த்து சோவியத் ரஷியா சீனக் கம்யூனிஸ்ட் படைகளுக்கு படையாட்களும் வேறு பல உதவிகளும் கொடுக்க முன்வரலாம்

முக்கிய சீன தினசரிப் பத்திரிகையான 'லாவான்போ'வில் பிரகரம் செய்யப்பட்டுள்ள செய்தி செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரின் வாக்குமூலத்தில் பிரஸ்தாப அறிவிப்பு பிரசம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெவ்வாக்குமூலத்தில் குறிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் வடவாசாவியில் சமீபத்தில் ஒரு கம்யூனிஸ்ட் மகாநாடு நடைபெற்றதாகவும் குறிப்பிட்டாராம்.

சீன உள்நாட்டுப் போர் நிலைமை

நாங்கிங், டிச. 26

கம்யூனிஸ்ட்படைகள் லியாவோ-சு மாகாணத்தின் புகுந்து மூன்றாறிக்கொண்டிருக்கின்றன சாங்சுங்கின் தென் பகுதியிலுள்ள அரசாங்க நகரைக்கைப்பற்றப் நோக்கத்துடன் 31 ஆயிரம் கம்யூனிஸ்ட் படைகள் முக்கத்துக்குத் திரண்டுகொண்டிருக்கின்றன.

மஞ்சூரியாவில் கம்யூனிஸ்ட் படைகள் 5 லட்சம் அல்லது 6 லட்சம் இருக்கலாம் என அரசாங்க வட்டாரங்கள் அனுமானிக்கின்றன 100 விமானங்களும் கம்யூனிஸ்டுகள் வசம் உண்டென எண்ணப்படுகிறது

இந்தோனேஷியாவில் டச்சு பிரதமர்

கிறிஸ்மஸ் தினத்தை துருப்புக்களுடன் சேர்ந்து கொண்டாடினார்

ஹேக், டிச. 26

டச்சு பிரதமரும் டச்சு வீடமைப்பு புனர் நிர்மாண இலாகா மந்திரியும் இந்தோனேஷியாவில் யுத்த நிறுத்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வந்திருந்தனர் இவர்கள் டச்சுக் துருப்புகளுடன் சேர்ந்து நேற்று கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடினார்கள் என்று நெதர்லாந்து செய்தி ஸ்தாபனம் கூறுகின்றது.

(ராய்ட்டர்)

கோனிட்ஸா நகரில் குண்டுமாரி

கொரில்லா படையினரின் போராட்டம்

ஏதென்ஸ், டிச. 26

கிரேக்க - அல்பேனிய எல்லைக்குச் சமீபத்தில் இருக்கும் கோனிட்சா நகரில் கிரேக்க அரசாங்க துருப்புகளுக்கு எதிராக 2000 கொரில்லாப் படையினர் தாக்குதலை ஆரம்பித்த போது நகரில் குண்டுமாரி பொழியப்பட்டதாக கூறப்பட்டது.

ஏதென்ஸிலுள்ள இராணுவத்திற்கு கிடைத்த செய்தியபடி 500 குண்டுகளுக்கு மேல் கோனிட்சா நகரில் வீசப்பட்டுள்ளதாகவும் அந்நகரத்தில் யுத்தம்நகருக்கு வெளியேயுள்ள டோராஸானி பாலகத்துக்கே நடந்து கொண்டிருந்ததாகவுந் தெரிகிறது. (ராய்ட்டர்)

பர்மா சுதந்திர தினக் கொண்டாட்டம்

சயாம்- இந்தோனேஷியா பிரதிநிதிகள் வந்துவிட்டனர்

ரங்கூன், டிச 26

பிரிட்டிஷ் பொறுப்பிலிருந்து அதிகாரத்தை பர்மா அரசாங்கம் ஏற்கும் சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சயாம், இந்தோனேஷிய பிரதிநிதிகள் இன்று இங்கு வந்து சேர்ந்துள்ளனர் சயாம் பிரதிநிதியாக எப்மொம்லெனங் என்பவரும், இந்தோனேஷிய பிரதிநிதியாக திரு மார்ஜோனி என்பவரும் வந்துள்ளனர். இவர்கள் பர்மா அரசாங்க பிரதிநிதிகளாக இருப்பர். (ராய்ட்டர்)

கலகத்தை தடுக்க முனைந்த கப்பல் அதிகாரி கொலை

போட்செட், டிச. 26

போட்செட் துறைமுகத்தில் "எம்பயர் சிவாஸ" கப்பலின் மூன்றாவது அதிகாரியான ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கேற்றமாலுமிகளிடையே ஒரு சண்டையைத் தடுக்க முனைந்த போது கொல்லப்பட்டார் என்று இன்று அறிவிக்கப்படுகிறது (ராய்ட்டர்)

குளிரில் 400 அகதிகள் நடுங்கிச் செத்தனர்

லாகூர், டிச. 26

கடந்த சில தினங்களில் வால்டர் முகாமில் சுமார் 400 முஸ்லிம் அகதிகள் குளிர்தாங்க முடியாமல் மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாகாணம் முழுவதிலும் வீடிலாமல் தவிக்கும் பல மக்களும் குளிரில் மடிந்திருப்பதாகவும் கூறப்படுகிறது

புத்தூர் மெ. மி. பாடசாலை பெற்றோர் தின விழா

புத்தூர், டிச 25

புத்தூர் மெ. மி. பாடசாலை பெற்றோர் தின விழா காரியதிகாரி திரு பராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. அத்தருணம் பெற்றோரும் மற்றும் அன்பர்களும் சமூகமாயிருந்தனர்.

திரு. எஸ். ராமச்சந்திரன் என்பவரால் பட்டுக தொழிலை என்னும் விஷயமும் வண. ஈகே இளையதம்பி என்பவரால் கல்வி வளர்ச்சி என்னும் விஷயமும் திரு. ஜே என் தம்பி முத்து என்பவரால் மாணாக்கரொழுக்கம் என்னும் விஷயமும் திரு. கே. நாகரத்தினம் என்பவரால் ஆங்கிலக் கல்வி என்னும் விஷயமும் பேசப்பட்டன மாணாக்கர் பக்க வாத்திய சங்கீதமாய் பாட்டுகோலாட்டம் முதலியனவும் கதை நடிப்பு பேச்சு முதலியனவுமாய் பல அபிநயாசங்களை நிகழ்த்தினர். ஈற்றில் பாடசாலைத் தலைமையாசிரியர் நன்றியுரை கூறினார்.

ரிஷி ரிஜிஸ்டர்/
நேத்திரசஞ்சீவி தைலம்
கண்ணாடிசல, கண்மறைப்பு, காதுரோகங்கள், பீனிசம், மண்டைடிப்பு, இருதயவியாதியாயும் நிவர்த்திப்படுமிடங்களுக்கு தருபமாகவும், அடர்த்தியாகவும், வளரச்செய்யும். 6 அவுன்ஸ் பாட்டில் 1 ரூ 3
தபாலசெலவுதனி
T.D.மதுரநாயகம் அன் கோ
ஞானசுந்தர வைத்தியசாலை
தபால்பெட்டி 669 — 187, செட்டியார் தெரு கொழும்பு....

ஜிந்தும்பிட்டியாவில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து புகழ் மாலை சூடிய சிறந்த சித்திரம்
"பூம்பாவை"
கே. ராமசாமி, யூ. ஆர் ஜீவரத்தினம் மற்றும் பலர் திறம்பட நடித்த தமிழ் படம் காண்பிக்கப்படும்.

உலகப்பிரசித்தி பெற்ற
டி.எஸ். கம்பெனி கிளிமார்க் பீடிகளை
உபயோகியுங்கள்
D. S. SONS. MUKKUDAL.
OUR CEYLON REPRESENTATIVE
ஆர். குசலவசேட்
91, மேட்டுத் தெரு, கொழும்பு.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என. ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்
கன்னிகா
மகத்தான 7-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
'இழந்த உறுதி'
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 28-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org